

கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு தொகுதி ஜீவாநகர் பகுதி கழகம் சார்பாக நடைபெற்ற கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பகுதி செயலாளர் காவேரி தலைமையில் மாவட்ட மாநில நிர்வாகிகள் கே.தனச்செல்வம், சோமசுந்தர பாண்டியன், ஜி.பி. ராஜா, ஆர்.கணேசன் மதுரை பாலா கழக பேச்சாளர் கம்பம் பாண்டித்துரை ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ராஜேஸ்வரன், விஜய் சேகர், ராம் பிரசாத், கண்ணன், முருகானந்தம், தமிழ்ச்செல்வி, ஆறுமுகம், மதிவெங்கடேஷ், பசும்பொன் கார்த்திக், வீரக்குமார், மதி மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் பங்கேற்றார்கள்

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# அண்ணாநகர் சோ.மா.ராமச்சந்திரன் 100வது பிறந்தநாள் விழா இன்று!

## அமைச்சர்கள் – முன்னணியினர் வாழ்த்து! மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, மே 15-

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ.மா.ராமச்சந்திரன் அவர்களின் 100-வது பிறந்தநாள் விழா, அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் வாழ்த்துகின்றனர் என்று மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பையும் நற்சான்றிதழையும் பெற்றவரும் கழகத் தலைவர் இந்தியாவின் நம்பர் 1 முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நம்பிக்கையுமான முன்னாள் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர், ஒருங்கிணைந்த அண்ணாநகர் பகுதி செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கழக செயல் வீரர் சோ.மா. ராமச்சந்திரன் அவர்களின் 100வது பிறந்த நாள் விழா இன்று (15.05.2025), காலை 9 மணியளவில் அய்யாவு மஹால், அமைந்தகரை, சென்னை - 29 என்ற முகவரியில் நடைபெறுகின்றது.



வாழ்க பல்லாண்டு பல்லாண்டு என வாழ்த்த வருகை தரும் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் பகுதி & வட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மவட்ட/ பகுதி / வட்ட அமைப்பாளர், தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், மூத்த முனோடிகள் என அனைவரும் பெருந்திரளாக வந்து அவரின் வாழ்த்துக்களை பெற வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில்

# 181 நபர்களுக்கு பணி நியமன ஆணை!

## அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார்!

சென்னை, மே 15-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் உட்பட 181 நபர்களுக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் பணி நியமன ஆணைகள் வழங்கினார்.

தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கி தரவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பல முன்னோடி திட்டங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 113 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 311 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. எதிர்வரும் 2025-26 ஆம் கல்வி ஆண்டில் மேலும் 19 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படவுள்ளன. துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி -IV தேர்வின் மூலம் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கு தேர்வு செய்யப்பட்டு வேலைவாய்ப்பு பிரிவில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட 9 சுருக்கெழுத்து தட்டச்சர்கள், 19 இளநிலை உதவியாளர்கள், 21 தட்டச்சர்கள் மற்றும் பயிற்சிப் பிரிவில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட 1 சுருக்கெழுத்து தட்டச்சர், 82 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 42 தட்டச்சர்கள் என மொத்தம் 174 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் 7 நபர்களுக்கும் பணி நியமனத் ஆணைகள் கிண்டி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் (13.05.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார்.

மேலும், 2023-24ஆம் ஆண்டில் சிறப்பாக பணி புரிந்த அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்கள் உட்பட 12 அலுவலர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதுகளையும் அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் கொ. வீர ராகவராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிவிப்பு!

சென்னை, மே 15-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி. கீதா ஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டம் நாளை (16.05.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு- கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் மாவட்ட அவைத்தலைவர் ஜி.செல்வராஜ், தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கழக துணைப் பொதுச் செயலாளர் தலைமைச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மாநில அணி துணை செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன். அதுபோது கழக வளர்ச்சி பணிகள் - குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க தென்காசி மேற்கு ஒன்றியம் சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் ஒன்றிய செயலாளர் திவான் ஒலி தலைமையில் இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். தலைமைக் கழக பேச்சாளர் சிலம்பை டென்னிசன், இளம் பேச்சாளர் சாகுல் ஹமீது ஆகியோர் உரையாற்றினர். நிகழ்வில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் அப்துல் காதர். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா. செல்லத்துரை, சேக் தாவூது . ஆறுமுகசாமி, பொருளாளர் ஷெரிப் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் நவ்ஷாத், தென்காசி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. கே.கே.நகர் பகுதி கழக சார்பாக நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் பகுதி செயலாளர் பி. அறிவுநிதி தலைமையில் நடைபெற்றது. மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக் கழக நிர்வாகிகள் பொன். முத்துராமலிங்கம்.வ. வேலுச்சாமி. பெ குழந்தைவேலு கழகப் பேச்சாளர்கள் சங்கீதா, இரா. கண்ணன், தெ. வர்ஷினி, மாமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பொதுக்குழு உறுப்பினர் முத்து கணேஷ், வட்டக் கழக செயலாளர் ராஜேஷ் கண்ணா, காத்தவராயன், செல்வராஜ், பிரேம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தெப்பக்காடு யானைகள் முகாமில் ரூ.5.06 கோடி செலவில்

# 44 குடியிருப்புகளுடன் கட்டப்பட்ட ‘மாவூத்’ கிராமம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**நீலகிரி, மே 15**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2025) நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் 5 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 44 அரசு குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள யானை பாகன்களுக்கான மாவூத் கிராமத்தை திறந்து வைத்தார்.**

மேலும், முதுமலை புலிகள் காப்பகத்தில் தமிழகத்திலேயே முன்னோடியாக 15 கி.மீ. நீளத்திற்கு தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வான்வழித் தொகுப்பு கம்பிகளின் (Aerial Bunched Cable) சேவைகளை தொடங்கி வைத்து, வன சரகர்களின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 32 வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு யானைகள் முகாமானது யானைகளை பராமரிப்பதில் தலைசிறந்து விளங்கும் முகாம் ஆகும். இம்முகாமிற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் வருகை புரிந்தார்.

**44 அரசு குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள மாவூத் கிராமத்தை திறந்து வைத்தல்**

யானைகளை பராமரிக்க தமிழ்நாடு வனத்துறையில் மாவூத் மற்றும் காவடி என நிரந்தர பணியாளர்கள் உள்ளனர். அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வை கவுரவிக்கும் விதத்தில், தெப்பக்காடு யானைகள் முகாமில் 5 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 44 அரசு குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள யானை பாகன்களுக்கான மாவூத் கிராமத்தை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். பின்னர் அக்குடியிருப்புகளுக்கான சாவிகளை பயனாளிகளுக்கு வழங்கி, குடியிருப்புகளை பார்வையிட்டு, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

**தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 15 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள வான்வழி தொகுப்பு கம்பி சேவையினை தொடங்கி வைத்தல்**

தமிழ்நாட்டில் 2024-25ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி மொத்தம் 3036 யானைகள் வனங்களை வாழ்விடமாக கொண்டுள்ளது. மேலும் நீலகிரி கிழக்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள முதுமலை புலிகள் காப்பகத்தில் மொத்தம் 2253 யானைகள் இடப்பெயர்ச்சிக்காகவும், சுமார் 440 யானைகள் நிரந்தர வாழ்விடமாகவும் கொண்டுள்ளது. முதுமலை புலிகள் காப்பகத்தின் உள்மண்டலத்தில் மட்டும் 5 கிராமங்களில் மொத்தம் 180 காட்டுநாயக்கர் குறும்பர் மற்றும் மலசர் ஆகிய பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர்.

உள்மண்டல பகுதியில் செல்லும் மின்சார கம்பிகள் காப்பிடபடாத கம்பிகளாக (Bare Wire) இருப்பதனால் வனவிலங்குகளுக்கு தீங்காக அமைய வாய்ப்பு உண்டு. எனவே, யானைகளின் புகலிடமாக திகழும் முதுமலை புலிகள் காப்பகத்தில் தமிழ்நாட்டிலேயே முன்னோடியாக 15 கி.மீ. நீளத்திற்கு தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 5 கோடி ரூபாய் செலவில் வான்வழி தொகுப்பு கம்பிகளாக (Aerial Bunched Cable) மாற்றப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் நேற்று முன் தினம் தொடங்கி வைக்கப்பட்டது.

**வன சரகர்களின் பயன்பாட்டிற்காக வாகனங்களை வழங்குதல்**

களப்பணியில் அயராது உழைக்கும் வன சரகர்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான பசுமை திட்டம் மூலமாக 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 30 பொலிரோ வாகனங்கள் மற்றும் 2 சிறப்பு ரோந்து வாகனங்கள் (All Terrain Vehicles), என மொத்தம் 32 வாகனங்களை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும், தெப்பக்காடு யானைகள் முகாமில் உள்ள யானைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் கரும்புகளை வழங்கினார். அத்துடன் அங்கு பணிபுரியும் ஆஸ்கார் விருது பெற்ற ‘The Elephant Whisperers’ ஆவணப் படத்தில் இடம் பெற்ற ரகு எனும் யானைக் குட்டியின் பராமரிப்பாளர்களான பொம்மன், திருமதி பெல்லி தம்பதியர்கள் உள்ளிட்ட மாவூத் மற்றும் காவடிகளுடன் கலந்துரையாடி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரூ, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.





கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய் நல்லூர் கிழக்கு ஒன்றிய கழகம் சார்பில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும், இது பல்லாண்டு என்ற தலைப்பில் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருவெண்ணெய் நல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், ஆமூர் கிராமத்தில் உதயநிதி ஸ்டாலின் திடலில் நடைபெற்றது. முன்னதார் ஆமூர் ஒன்றிய கவுன்சிலர் கிளை கழக செயலாளர் டி.ஜெயராமன் வரவேற்புரையாற்றினார், இதில் சிறப்பு அழைப்பாளர்களாக ஆ.ஜெ.மணிக்கண்ணன், கோ.காசிவிசுவநாதன், சிறுவானூர் பரசுராமன், ஆகியோர் கலந்துகொண்டு கழக அரசின் நான்காண்டு சாதனை திட்டங்களை பொதுமக்களிடம் விளக்கி கூறி சிறப்புரை யாற்றினார்கள், இறுதியாக எஸ்.பிரேம் நன்றியுரை ஆற்றினார், இக்கூட்டத்தில் ராஜீவ் காந்தி மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.